கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள், சென்னை – 6
பிறப்பிப்பவர் : முனைவர். திரு. சி. பூரணசந்திரன், எம்.சி.ஏ, எம்.பில், பி.எச்.டி.,

---

ந.க.எண். 19596/பி1/2021 நாள். 01.04.2022

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை – 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறைப்படுத்துதல் – ஆணை மற்றும் வழிமுறைகள் வெளியிடப்பட்டது – உத்திரமேரூர், புரட்சிதலைவர் டாக்டர்.எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, இளநிலை உதவியாளர், திரு.மா.விண்ணரசு – பணியினை வரன்முறைப்படுத்துதல் – ஆணை வழங்குதல்.

பார்வை: அரசாணை (நிலை) எண். 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள். 26.02.2021

-----

செய்யாறு, அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் தோட்டக்காரராக பணியாற்றி பணியிலிருக்கும் காலத்தில் 03.03.2016 அன்று இயற்கையெய்திய திரு. மு. மாரிமுத்து என்பவரின் மகனான திரு.மா.விண்ணரசு என்பவருக்கு உத்திரமேரூர், புரட்சிதலைவர் டாக்டர்.எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பணி நியமனம் வழங்கப்பட்டு 27.06.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார். அன்னார் பிறந்த தேதி 31.03.1996 என்றும், பணிநியமனத்தின்போது எஸ்.எஸ்.எல்.சி தேர்ச்சி பெற்றுள்ளதாலும், இளநிலை உதவியாளர் பதவிக்குரிய முழுத்தகுதி பெற்றுள்ளதாலும், உரிய வயதினை நிறைவு செய்துள்ளதாலும், அன்னாரின் பணி நியமனத்திற்கோ, வயது வரம்பிற்கோ விதித் தளர்வாணைகள் பெற வேண்டிய நிலை எழவில்லை.

02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்ய சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்து செயல்முறை ஆணை வெளியிடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, திரு.மா.விண்ணரசு என்பார் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த 27.06.2018 முற்பகல் முதல் அன்னாரது பணியினை வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

கல்லூரிக் கல்வி இயக்குநர்

பெறுநர்

1. திரு.மா.விண்ணரசு ,
   இளநிலை உதவியாளர் (உரிய வழியாக)
2. முதல்வர்,
   புரட்சிதலைவர் டாக்டர்.எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
   உத்திரமேரூர்.

நகல்

1. இருப்புக் கோப்பு
2. உபரி நகல்